2. 27–4–2010 அன்று அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டபோது, பெண் உறுப்பினர்கள் சிலர் காவலர்களால் தாக்கப்பட்டதாகத் தெரிவித்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.ஏ. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய நிகழ்ச்சியில், நாடு தழுவிய பந்த் என்ற முறையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, அதை வெளிப்படுத்துகின்ற வேளையில், சட்டமன்றத்திலே நீங்கள் எங்களை வெளியேற்றிய நேரத்தில், உறுப்பினர்கள் திருமதி இளமதி சுப்பிரமணியன் மற்றும் திருமதி பதர் சயீத் போன்ற பெண் உறுப்பினர்கள் அத்துமீறித் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். இந்த நிலையைப் பொறுத்தவரையிலும் காவல் துறை என்பது மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய துறை. அதுமட்டுமல்ல; சட்டமன்றம் நடக்கின்ற இந்த இடத்திலே, சட்டமன்ற உறுப்பினர்கள், அதுவும் பெண் உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை உருவாகியிருப்பதைக் காணுகிறபோது இந்த அத்துமீறிய செயல் இனிமேல், எதிர்காலத்தில் சட்டமன்றத்திலே நடக்காத அளவிற்கு நீங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தி அமர்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன். காவலர் தரப்பிலிருந்தும், காவலர்கள் உங்களுடைய உறுப்பினர்களால் தாக்கப்பட்டதாக என்னிடம் புகார் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினை சம்பந்தமாக நாம் பேசவேண்டுமென்றால் என்னுடைய அறைக்கு வாருங்கள், பேசிக்கொள்ளலாம்.

3. தகவல் கோரல்

(அ) தனியார் பள்ளிகளில் வசூலிக்கும் கட்டணத்தை முறைப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு, பள்ளிக் கல்வித் துறை ஏற்கெனவே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, பள்ளிகளில் வசூலிக்கக்கூடிய கட்டணத்தை வரைமுறைப்படுத்துவதற்காக Justice கோவிந்தராஜன் Committee-ஐப் போட்டு கட்டணத்தை நிர்ணயித்திருக்கிறது. அந்தச் சட்டம் செல்லும் என்றும் சென்னை உயர் நீதிமன்றம் இப்போது தீர்ப்பளித்திருக்கிறது. தீர்ப்பளித்து நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிற இந்தநேரத்தில் தமிழக அரசு, எந்தெந்தப் பள்ளி, எவ்வளவு கட்டணம் வசூல் செய்ய வேண்டுமென்று இன்னும் அறிவிப்பு செய்யாத நிலையில், பல தனியார் பள்ளிகள், மெட்ரிக் பள்ளிக்கான கட்டணத்தை ஏற்கெனவே வசூல் செய்து admission-களையெல்லாம் முடித்துவிட்டிருக்கிறார்களே! இது அரசுக்கு தெரியுமா? பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இதுசம்பந்தமாக என்ன அறிவிப்பு கொடுக்கப் போகிறார் என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொன்ன விஷயம் சம்பந்தமாக காலையில் முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்வில் இருக்கிறது. பிறகு பார்ப்போம், உட்காருங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு அமைச்சர் பதிலளிக்க தயாராக இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் தயாராக இருந்தாலும் நான் எடுக்க வேண்டுமல்லவா? உட்காருங்கள்.

2010 ஏப்ரல் 28]

4. சென்னை, திருவொற்றியூர், கண் பார்வை பாதிக்கப்பட்ட சிறுமியின் சிகிச்சைக்கு உதவிய மாண்புமிகு துணை முதலமைச்சருக்குப் பாராட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

***திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தேர்தல் களத்தில் முதன்முதலாக சட்டமன்ற உறுப்பினராக வர போட்டியிட்ட தொகுதியான சென்னை, திருவொற்றியூரைச் சேர்ந்த சுரேகா என்கிற 12 வயது சிறுமி, கண் நோயால் பாதிக்கப்பட்டு, அவர் மேல் சிகிச்சை செய்துகொள்ள முடியாத ஒரு துயரத்திற்கு ஆளானபோது, அந்தச் செய்தியை 'தினத்தந்தி'-யில் படித்து, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், அதற்கு ஆகிற முழுச் செலவையும் ஏற்று, பூரணமாக அந்தப் பெண், பார்வை பெறுவதற்கான வழிவகை வகுத்தமைக்காகவும் தனது சொந்த செலவிலே அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டதற்காகவும் என்னுடைய குடும்ப உறவுகளின் சார்பாகவும், அந்த ஏழை ஓட்டுநர் தொழிலாளியின் குடும்பத்தின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) விருதுநகர் மாவட்டம், படுகொலை செய்யப்பட்ட கோவில் பாதுகாப்புப் பணிக் காவலரின் குடும்பத்திற்கு நிவாரணம் கோருதல்

திரு. தி. வேல்முருகன்: அதேபோல, இன்னொரு பிரச்சினை. விருதுநகர் மாவட்டத்தில், கோவில் பாதுகாப்புப் பணிக்குச் சென்றிருந்த ஒரு காவலர், அங்கு ரவுடிக் கும்பலால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். அந்த போலீஸ்காரருக்கு இரண்டு பெண் குழந்தைகள் இருக்கின்றனர். பாதுகாப்புப் பணியில் இருந்த அவர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். காவலர் தன்னுடையப் பணியைச் சிறப்பாக மேற்கொண்டிருந்தபோதிலும், அந்த ரவுடிக் கும்பலால் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். 2 பெண் குழந்தைகளுடன் தத்தளித்துக் கொண்டிருக்கிற அந்தக் குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 10 இலட்சம் வழங்கி,